சொன்னுல் பரவாயில்லே. தவருன வார்த்தைகளைப் பயன்படுத்தினல் எக்ஸ்பஞ்ச் பண்ணலாம்.

But you are expunging the entire proceedings.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Rule 83 (8) says—

'The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members, when in his opinion it is an abuse of the right of raising a point of order'. இது விதி.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இனிமேல் நாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்புச் சொல்லிவிட்டால், அது நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிடும். அது பயங்கரமான உத்தரவாக அமைகிறது. லோக் சபாவில் இது போன்று ஒரு பிரஸிடெண்டும் கிடையாது.

There is not a single precedent either in the May's Parliamentary Practice or in the House of Commons.
எந்த இடத்திலும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்ன தீர்ப்பு பேரவைத் தலைவர் தாளுகச் சொல்லவில்லை. விதிமுறையில் அவ்வாறு இருக்கிறது. விதி முறையைத்தான் எடுத்துச் சொன்னேன். இந்த முறையானது, உரிமையை பறிக்கக்கூடியது என்றெல்லாம் நீங்கள் சொல்கிறீர்கள். விதிமுறைக்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுங்கள். இப்பொழுது விதியில் தெளிவாக இருக்கிறது.

"The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members, when, in his opinion, it is an abuse of the right of raising a point of order". என்று தெளிவாக இருக்கிறது. இந்த விதி முறையை மாற்றுங்கள்.

There is no point of order.

(இ) திரு. கே. ஏ. மதியழகனுக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்காதது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இன்னெரு பாயிண்டு ஆப் ஆர்டர். இந்த அவையிலே இருப்பவர்களுக்கு இருக்கைகளை தாங்கள் ஒதுக்குகிறீர்கள். சாதாரணமாக இங்கு ஒரு மரபு இருக்கிறது. முன்னுள் ஸ்பீக்கர்கள், முன்னுள் அமைச்சர்கள் எதிர்க் கட்சி முன்வரிசையில் அமர்த்தப்படுவார்கள். ஆனல்

திரு. மதியழகன் அவர்கள் அப்படி முன்வரிசையில் இடம் கொடுக்கப்படாமல் பின்னால் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் இடம் ஒதுக்கப் படுமா, அல்லது அவர்கள் பின்னால்தான் இருக்கவேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்று மில்லை. அவர்கள் முதல் இடத்தில்தான் உட்கார்ந்திருக்கிறார்கள். 'ஸீட் நெம்பர் ஒன்'.

(3-ஆ) நடைமுறைக் கேள்விகள் அல்லாதவற்றை நடைமுறைக் கேள்விகளாக எழுப்பினால் அவற்றை நீக்கிவிடுவது குறித்து—தொடர்ச்சி.

திரு. கே. எம். சுப்பிரமணியம் :

You have read the rule. It relates to your discretionary power.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிஸ்கிரஷனரி பவர் இல்லை.

திரு. கே. எம். சுப்பிரமணியம் :

"The Speaker may order the expunction of any portion of proceedings of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்பீக்கருக்கு இருக்கிற தனிப்பட்ட அதி காரம் இல்லை. விதிமுறையில் அப்படித் தான் இருக்கிறது.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : நாம் போட்டிருக்கிற வார்த்தைகளைக் கேளுங்கள்.

"The Speaker may expunge a portion", and not the entire speech. It does not say— பாயின்டு ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்னால் அப்படியே ரிமூவ் செய்ய வேண்டும் என்று இல்லை, எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டு மென்றும் இல்லை. அப்படியிருந்தால் நாம் ஜனநாயக முறையில் டெமாக்ரடிக் காக நடத்த முடியாது. அது சொல்வதெல்லாம் 'டிஸ்கிரஷனரி பவர் டு தி ஸ்பீக்கர்'. ஏதாவது தவறாக உபயோகப்படுத்தியிருந்தால், அந்தப் பவரை யூஸ் பண்ணலாம். பாயின்டு ஆப் ஆர்டர் இல்லை என்று தாங்கள் சொல்லி, விட்டால் அதற்கு மேலே பப்ளிஸிடி கூடாது, எக்ஸ்பஞ்ச் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் மட்டும் அம்மாதிரி நிலை இல்லை...